Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 14, 2023

வியாழக்கிழமை டிசெம்பர் 14, 2023 | ஒளி: 09 கதிர் 149 | பக்கம்:06 | நகரப்பதிப்பு ★ | FREE

## நிறைவேறியது பட்ஜெட்

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் (பட்ஜெட்) பாராளுமன்றத்தில், புதன்கிழமை (13) திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. பட்ஜெட்டுக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 81 வாக்குகளும் அளிக்கப்பட்டன. ஒருவர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் 2024 புத்தாண்டுக்கான முதலாவது பாராளுமன்ற அமர்வு ஜனவரி 9ஆம் திகதியன்று கூடும்.

இந்த வழியைத் தவிர

# “வேறு வழியில்லை”



### கயிற்றுப் பாலத்தை கடக்க என்னை அர்ப்பணிப்பேன் என்கிறார் ஜனாதிபதி

நாட்டின் மறுசீரமைப்புக்கான நீடிக்கப்பட்ட கடன் வசதியின் இரண்டாவது தவணை அங்கீகரிக்கப்பட்டதாக சர்வதேச நாணய நிதியம் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. இப்போது வங்குரோத்து அரசு என்ற முத்திரையைக் கழற்றிவிட ஒரு தீர்க்கமான நடவடிக்கையை எடுத்துள்ளோம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அழித்த காணொளிகளை மீண்டும் எடுக்க முடியுமா?

### மௌலவி அடிக்கடி கேட்டார் என்கிறார் சி.சி.ரி.வி தொழில்நுட்பவியலாளர்

மௌலவி அடிக்கடி தொலைபேசி எடுத்து, அழித்த சி.சி.ரி.வி காணொளிகளை மீண்டும் எடுக்க முடியுமா என கேட்ட வண்ணம் இருந்தார் என சி.சி.ரி.வி தொழில்நுட்பவியலாளர் தெரிவித்தார்.

சி.சி.ரி.வி தொழில்நுட்பவியலாளரான எனக்கு சம்பவ தினமன்று இரவு 7 மணியளவில் தொலைபேசி அழைப்பை எடுத்த மௌலவி, மத்ரஸாவுக்கு உடனடியாக வந்து எல்லாவற்றையும் வன்பொருள் (HARD

தொடர்ச்சி P2



## வாழ்நாள் சாதனையாளர்கள் கௌரவம்

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்துடன் இணைந்து, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் 24ஆவது தடவையாக நடத்திய இதழியல் சிறப்பு விருது விழா, கல்கிசை-மவுண்லேனியா ஹோட்டலில், டிசெம்பர் 12ஆம் திகதி இரவு நடைபெற்றது.

படத்தில் வலமிருந்து இடமாக, அல்ஹாஜ் எம்.ஏ.எம்.நிலாம், சீதா ரஞ்ஜனி, ஸ்டான்லி சமரசிங்க, எச்.எல்.டி. மஹிந்தபால, சின்னத்துரை தில்லைநாதன் ஆகியோர், வாழ்நாள் சாதனையாளர்களாகக் கௌரவிக்கப்பட்டனர்.

(மேலதிக படங்கள்: பக்கம்-5)



மக்களவைக்குள் அத்துமீறி நுழைந்து

## எம்.பி.க்கள் மீது மர்மப் பொருள் வீச்சு

### இளைஞர்கள் 4 பேர் கைது: பாஸ் இடைநிறுத்தம்

இந்திய பாராளுமன்றம் மீதான தாக்குதல் நடந்து 22 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், அதேநாளில் மற்றுமோர் அசம்பாவிதம் பாராளுமன்றத்தில் நடந்துள்ளது. அத்துமீறி உள்ளே நுழைந்தவர்கள், மற்றும் வெளியே இருந்தவர்கள்

தொடர்ச்சி P2

## “கிளிநொச்சி மைதானம் தேசிய அநீதியாகும்”



கிளிநொச்சி விளையாட்டு மைதானம் 400 மில்லியன் ரூபாய் செலவில் அபிவிருத்தி செய்யப் பட்டது.

எனினும் அதன் தற்போதைய நிலையைப் பார்க்கும்போது அது தேசிய அநீதி என்றே குறிப்பிட வேண்டும் என சுற்றுலாத்துறை மற்றும் இளைஞர் விவகார, விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன்

தொடர்ச்சி P2

## மாத செலவு 175,000ரூபாய்



பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் 4 பேர் கொண்ட ஒரு குடும்பத்தின் மாத செலவு 85,000 ரூபாயாக இருந்தது. ஆனால், தற்போது அந்த செலவுத் தொகை 175,000 ரூபாயாக அதிகரித்துள்ளது. சத்திர சிகிச்சை வெற்றியானால் நோயாளி மரணம் என்ற வகையிலேயே ஜனாதிபதியின் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 2ஆவது கடன் தவணைக்கு IMF அனுமதி

இலங்கைக்கு வழங்கப்படவுள்ள இரண்டாவது கடன் தவணையான 337 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதி வழங்கியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை, இலங்கை காட்டிய முன்னேற்றத்தில் திருப்தி அடைவதாக சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்ச்சி P2

## வாக்குறுதிகள் பலவற்றை இலங்கை நிறைவேற்றியுள்ளது




சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவித் திட்டத்தில் வரி மற்றும் முதலீட்டு இலக்குகள் தவிர்ந்த பல வாக்குறுதிகளை இலங்கை நிறைவேற்றியுள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை செயற்பாடுகளின் தலைவர் பீட்டர் ப்ரூவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உதவித் திட்டத்தை அமுல்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள

தொடர்ச்சி P2

## இனிமேலும் அப்படி அழைக்காதீர்கள்

கல்முனை உப பிரதேச செயலகம் என இனிவரும் காலங்களில் எவரும் அழைக்க கூடாது என கல்முனை தமிழரசுக் கட்சி தொகுதிக்கிளையின் தலைவர் நிதான்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜம்மு–காஷ்மீர் தீர்ப்பை நிராகரித்தது பாகிஸ்தான்

ஜம்மு - காஷ்மீர் சர்ச்சை என்பது ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் மற்றும் சர்வதேச அளவில் அறியப்பட்ட ஒரு சர்ச்சையாகும். ஜம்மு - காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வானது ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களின் படியும், காஷ்மீர் மக்களின் அபிலாஷைகளின் படியும் நிறைவேற்றப்பட வேண்டும். காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் மக்களின் விருப்பத்திற்கு எதிராக இந்த சர்ச்சைக்குரிய பிரதேசத்தின் தீர்வு குறித்து ஒருதலைப்பட்சமாக முடிவெடுக்க இந்தியாவுக்கு எந்த உரிமையும் இல்லை என்று கொழும்பில் உள்ள இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜம்மு - மற்றும் காஷ்மீர் மீதான இந்திய அரசியலமைப்பின் மேலாதிக்கத்தை பாகிஸ்தான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏற்ப வழங்கப்பட்ட இந்த தீர்ப்புக்கு எவ்வித சட்ட மதிப்பும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “என்னை தள்ளுகின்றனர்”



என்னை எதிரணி பக்கம் அனுப்புவதற்கு ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள் அதனாலேயே நான் எதிரணி பக்கம் செல்லவுள்ளதாகப் பொய்யான வதந்தி பரப்பி விடப்பட்டுள்ளதென முன்னாள் விளையா ட்டுத் அமைச்சரும் அரச தரப்பு எம்.பியுமான ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) சிறப்புரிமை மீறல்

தொடர்ச்சி P2

## “அந்த அக்கறையை இதிலும் காட்டவும்”



காலனித்துவ ஆட்சியில் 108 வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி தொடர்பில் காட்டும் அக்கறையை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் படுகொலைகள் தொடர்பிலும் அரசு காட்ட வேண்டுமென எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# "கிளிநொச்சி மைதானம் தேசிய அநீதியாகும்"

பெர்னாண்டோ தெரிவித்தார்.

அதேபோன்று, விளையாட்டு மைதானம் அமைக்கப்படாமலே பார்வையாளர் அரங்க மண்டபம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் விசேட குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் எதிர்க்கட்சி எம்.பியான கிங்ஸ் நெல்சன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

விளையாட்டு மைதானங்களின் பராமரிப்புக்களில் உள்ள பிரச்சினைகள், விளையாட்டு உபகரணங்களின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் அதனால் பாதிக்கப்படும் மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பில் கிங்ஸ் நெல்சன் எம்.பி. கேள்விகளை எழுப்பினார்.

இக்கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில்,

நாடளாவிய ரீதியில் பெருமளவு விளையாட்டு மைதானங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பராமரிப்பது தொடர்பில் பிரச்சனைகள் காணப்படுகின்றன. அதனால் தனியார்த்துறையினருடன் இணைந்து அது தொடர்பான வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

விளையாட்டு மைதானங்களில் பராமரிப்பு தொடர்பில் தற்போது நாம் டயலொக் மற்றும் டெலிகொம் நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றோம். அவ்வாறு இடம்பெறும் போது மாகாண மட்டத்தில் உள்ள சிறுவர்களுக்கு விளையாட்டு மைதானத்திற்குள் பிரவேசிப்பதற்காக அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

குறிப்பாக நீச்சல் தடாகங்கள் போன்றவற்றைப் பராமரிப்பது பெரும் கஷ்டமான விடயம். அது தொடர்பில் விளையாட்டுத் துறை அமைச்சுக்கு உரிய அனுபவம் இல்லை. புல் வெட்டுபவரில் இருந்து பெரும்பாலான பதவிகள் அரசியல் ரீதியாக வழங்கப்பட்டுள்ளமையே அதற்கு காரணம் என்றார்.

# மாத செலவு 175,000ரூபாய்

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கான செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், நாடு தற்போது சற்று ஸ்திரநிலையடைந்துள்ளது என்று ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்கிறேன். நாட்டில் தற்போது எரிபொருள்,எரிவாயுவுக்கான வரிசை இல்லை .ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கை செலவுகள் 95 சதவீதமளவில் உயர்வடைந்துள்ள பின்னணியில் தான் நாடு சற்று இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை கடன் கிடைக்கப்பெற்று ள்ளதையிட்டு நாட்டு மக்களுக்காக மகிழ்ச்சியடைகின்றோம். ஆனால் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள வரியை மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது என்பதை ஜனாதிபதி ஏற்றுக்கொள்வதில்லை. நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளிய பொருளாதார படுகொலையாளிகள் தொடர்பில் ஜனாதிபதி ஏதும் குறிப்பிடவில்லை. நாட்டு மக்களால் நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ஜனாதிபதி பேசுகிறார் என்றார்.

# 2ஆவது கடன் தவணைக்கு IMF அனுமதி

அதன்படி, முதல் மதிப்பாய்வின் நிறைவிற்கு அமைய SDR 254 மில்லியன் (சுமார் 337 மில்லியன் அமெரிக்க டொலர்) நிதி வசதியை உடனடியாக இலங்கைக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது.

இதற்கமைய, சர்வதேச நாணய நிதியத்தின் விவாதிக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் இலங்கைக்கு இதுவரை வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி SDR 508 மில்லியன்களாகும்.

(SDR ஒரு நாணயம் அல்ல, ஆனால், அதன் மதிப்பு ஐந்து நாணயங்களின் அடிப்படையாகக் கொண்டது அமெரிக்க டாலர், யூரோ, சீன ரென்மின்பி, ஜப்பானிய யென் மற்றும் பிரிட்டிஷ் பவுண்ட் ஸ்டெர்லிங் ஆகும்)

# வாக்குறுதிகள் பலவற்றை இலங்கை நிறைவேற்றியுள்ளது

முன்னேற்றம் குறித்து சர்வதேச நாணய நிதியம் திருப்தியடைந்துள்ளதாகவும், எனவே, வழங்கப்பட்டுள்ள 337 அமெரிக்க டொலர் கடனின் இரண்டாம் தவணையை இலங்கைக்கு உடனடியாக செலுத்துவதற்கு செயற்குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் வரி வருமானம் மிகக் குறைந்த மட்டத்தில் இருப்பதாகவும் இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.3 சதவீதமாகும் எனவும் பீட்டர் ப்ரூவர் தெரிவித்தார்.

ஆனால் மற்ற வளரும் நாடுகளில் வரி வருவாய் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 26 சதவீதமாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்திற்கு அத்தியாவசிய சேவைகளை வழங்குவதற்கு வரி வருமானத்தை அதிகரிப்பது அத்தியாவசியமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடன் மறுசீரமைப்பில் சீனா உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவாக மாற வேண்டிய அவசியமில்லை என்றும், இரகசியத்தன்மையைப் பாதுகாக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் சீனக் கடன் மறுசீரமைப்பு விதிமுறைகளைச் சர்வதேச நாணய நிதியத்திற்கு பிரான்ஸ் வழங்கப் போகிறது என்றும் அவர் கூறினார்.

# "வேறு வழியில்லை"

விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடினமான பயணத்தில் ஒரு முக்கிய இடத்தை அடைந்துவிட்டோம் என்று அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த சவாலான மற்றும் வெற்றிகரமான பயணத்திற்குத் தலைமை ஏற்றமை குறித்து எனக்குப் பணிவான மகிழ்ச்சியே உள்ளது என்றார்.

நான் கடந்த ஆண்டு வங்குரோத்தான நாட்டையே பொறுப்பேற்றேன். இந்த வங்குரோத்து நாட்டை பொறுப்பேற்க இந்த நாட்டில் எந்த அரசியல் கட்சித் தலைவர்களும் முன்வரவில்லை. இந்த சவாலை ஏற்க அனைவரும் பயந்தனர். இப்போது பாராளுமன்றத்தில் உரையாற்றும் வீரர்கள் மற்றும் தலைவர்கள் எவருக்கும் முன்வருவதற்குத் தைரியம் இருக்கவில்லை.

ஆனால் நான் அந்த சவாலை ஏற்றுக்கொண்டேன். இலங்கை ஆபத்தான கயிற்றுப் பாலத்தைக் கடக்க நான் என்னை அர்ப்பணிப்பேன் என்று அன்று கூறினேன். என்னிடம் இருந்ததெல்லாம் உறுதியும் திட்டமும் மாத்திரமே. அப்போது எனது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு உறுப்பினர் கூட பாராளுமன்றத்தில் இருக்கவில்லை.

இந்த கயிற்றுப் பாலத்தின் பயணத்தைச் சிலர் கேலி செய்தனர். அவமதித்தனர். ஆனால் இந்த பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் என்னை ஆதரித்தனர். அவர்களையும் கேலி செய்தனர்.

மேலும், நாட்டு மக்கள் எனக்கு ஆதரவளித்தனர். நாட்டின் நலனுக்காகவும், இலங்கை அன்னையின் பாதுகாப்பிற்காகவும் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு இந்தப் பயணத்திற்கு ஒத்துழைப்பு வழங்கினர் என்றார்.

இங்கு இன்னொரு விடயத்தையும் வலியுறுத்த வேண்டும். உலகில் வங்குரோத்து அடைந்த நாடுகள் இயல்பு நிலைக்குத் திரும்ப எடுத்துக்கொண்டதை விடக் குறைந்த காலத்தில் நம்மால் மீண்டுவர முடிந்தது. மேலும், மக்கள் மீது குறைந்தளவு சுமையைச் சுமத்தி இந்த சவாலை வெற்றிகொள்ள முடிந்தது. இது ஒரு பாரிய வெற்றியாகும்.

கிரீஸ் நாட்டில் பொருளாதார நெருக்கடி 2008 இல் ஏற்பட்டது. அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்ப 10 ஆண்டுகளுக்கும் மேல் ஆனது. அவர்கள் நெருக்கடியைச் சமாளிக்கத் தனிநபர் வருமான வரியை 45% ஆக உயர்த்தினார்கள்.

நான் நாட்டைப் பொறுப்பேற்ற ஆரம்பக் கட்டத்தில், நமது நாட்டில் பணவீக்கம் 70%ஐத் தாண்டியது. கடந்த ஒக்டோபர் மாதத்திற்குள், அதை 1.5% ஆகக் குறைக்க முடிந்தது. நமது திறைசேரிப் பத்திர வட்டி வீதம் (Treasury bills) 30% லிருந்து 13% ஆக குறைந்துள்ளது.

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடையாமல் பாதுகாத்து ஓரளவு ஸ்திரத்தன்மைக்கு அதனைக் கொண்டு வந்தோம். நான் நாட்டைப் பொறுப்பேற்ற போது, ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி 80% வரை அதிகரித்திருந்தது. ஒரு டொலருக்கு 360 ரூபாய் வரை ரூபாவின் பெறுமதி குறைந்தது. இப்போது ஒரு டொலருக்கு 325-330 ரூபா என்ற அளவில் நிலைபெற்றுள்ளது. பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் லெபனான் இன்னும் அந்நிய செலாவணி விகிதத்தை நிலைப்படுத்த முடியவில்லை.

கயிற்றுப் பாலம் எனும்போது ஹென்றி ஜெயசேனவின் "ஹூனுவடயே கதை" தான் நம் நாட்டில் பெரும்பாலானோருக்கு நினைவுக்கு வருகிறது. அந்த நாடகத்தில் வருகின்ற கயிற்றுப் பாலத்தின் பாடல்.

கயிற்றுப் பாலத்தின் பாடலைப் பாடும் குருஷா கூறுகிறார்.

"எங்களுக்கு வேறு வழியில்லை, மகனே இந்த வழியில், செல்வோம் மகனே" இன்றும் நாம் அதனையே கூற வேண்டும். இந்த வழியைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை என்றார்.

# ஜம்மு-காஷ்மீர் தீர்ப்பை நிராகரித்தது பாகிஸ்தான்

உள்நாட்டு சட்டங்கள் மற்றும் நீதித்துறை தீர்ப்புக்கள் என்ற போர்வையில் இந்தியா தனது சர்வதேச கடமைகளைக் கைவிட முடியாது. இந்தியா சட்டவிரோதமாக ஆக்கிரமித்துள்ள ஜம்மு - காஷ்மீரை இணைக்கும் அதன் திட்டங்கள் தோல்வியிலேயே முடியும்.

ஒகஸ்ட் 5, 2019 அன்று இந்தியாவின் ஒருதலைபட்சமான மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு நீதித்துறை ஒப்புதல் அளித்திருப்பது திரிபுபடுத்தப்பட்ட வரலாற்று மற்றும் சட்ட வாதங்களை அடிப்படையாகக் கொண்ட நீதியின் கேலிக்கூத்தாகும்.

இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பானது, சர்வதேச அளவில் அறியப்பட்ட சர்ச்சைக்குரிய ஜம்மு-காஷ்மீர் பிரச்சினையின் தன்மையை சரியாக புரிந்து கொள்ள தவறி உள்ளது. மேலும், 2019 ஒகஸ்ட் 5இல் இந்தியாவின் சட்டவிரோத மற்றும் ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளை ஏற்கனவே நிராகரித்துள்ள காஷ்மீர் மக்களின் அபிலாஷைகள் என்ன என்பதனையும் புரிந்து கொள்ள தவறி உள்ளது. இந்தத் தீர்ப்பானது, இந்தியாவின் தற்போதைய கீழ்த்தரமான நீதித்துறையின் மற்றொரு வெளிப்பாடாகும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

# "அந்த அக்கறையை இதிலும் காட்டவும்"

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு வலியுறுத்திய எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் கூறுகையில்,

காலனித்துவ ஆட்சியில் 108 வருடங்களுக்கு முன்னர் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி பேதிரிஸ் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவுக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது இதனை நாம் வரவேற்கிறோம். ஹென்ரி பேதிரிஸ் படுகொலை செய்யப்பட்டமை மிலேச்சத்தனமானது.

அதேவேளை, சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க,ரிச்சட் சொய்ஸா, முன்னாள் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ், மகேஸ்வரன் படுகொலை மற்றும் சாகரிகா கோமஸ், பிரேம கீர்த்தி அல்விஸ் ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை, உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் படுகொலை செய்யப்படடோர் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொண்டு உண்மை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். காலனித்துவ ஆட்சியில் படுகொலை செய்யப்பட்ட எட்வர்ட் ஹென்றி தொடர்பில் காட்டும் அக்கறையை அண்மை காலத்தில் படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பிலும் அரசு காட்ட வேண்டும் என்றார்.

# "என்னை தள்ளுகின்றனர்"

பிரச்சினையை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடியாளர்களை நீக்கி, நான் நியமித்த இடைக்கால தெரிவுக்குழுவை இரத்து செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஊழலுக்குத் துணை போவதை இந்த அரசாங்கம் உத்தியோகப்பூர்வமாக அறிவித்துள்ளது.

நான் 69 இலட்ச மக்களாணையை பிரதிநிதித்துவப்படுத்தி ஆளும் தரப்பில் உள்ளேன். என்னை எதிரணி பக்கம் அனுப்புவதற்கு ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

அதற்காகவே நான் எதிரணி பக்கம் செல்லவுள்ளதாகப் பொய்யான வதந்தி பரப்பி விடப்பட்டுள்ளது. எதிரணி பக்கம் செல்ல வேண்டிய தேவை எனக்கில்லை என்றார்.

# அழித்த காணொளிகளை மீண்டும் எடுக்க முடியுமா?

DISK) அழிக்க வேண்டும் என பதற்றத்துடன் கேட்டுக்கொண்டார்.

அதற்கு நான் என்னால் வரமுடியாது என மௌலவியிடம் கூறி விட்டேன். அத்துடன், வன்பொருள் (HARD DISK) ஏன் அவற்றை அழிக்க வேண்டும். என கேட்டதற்கு அவர் ஒன்றுமே சொல்லவில்லை. பின்னர் எனது சகோதரரின் தொலைபேசி இலக்கத்தை அனுப்பி அவரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டேன்.

பின்னர் இரவு 11 மணியளவில் மாணவன் இறந்த பின்னர் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது. அந்தவேளை, நாங்கள் சி.சி.ரி.வி பரிசோதனை மேற்கொண்ட மத்ரஸாவில் மாணவன் மரணமாகியுள்ளதாக எனது சகோதரர் என்னிடம் கூறினேன்,

நான் அவரிடம் அங்கு என்ன செய்தீர்கள் என சகோதரரை கேட்டேன். அப்பாடசாலையில் சி.சி.ரி.வி வன்பொருள் (HARD DISK) காணொளிகளை அழிக்குமாறு மௌலவி கேட்டதுடன், வன்பொருள் (HARD DISK) அதனை அங்கிருந்து அகற்றி செல்லுமாறு பதற்றத்துடன் கூறினார். அத்துடன் 1,000 ரூபா காசும் கொடுத்து 3 நாளைக்கு பின்னர் வன்பொருள் (HARD DISK) வந்து பொருத்தி தருமாறும் எனது சகோதரரிடம் மௌலவி கூறி இருக்கிறார்.

அத்துடன் சம்பவம் இடம்பெற்று பதற்றம் நீடித்து இருக்கின்ற நிலையில், மௌலவி அடிக்கடி தொலைபேசி எடுத்து அழித்த சி.சி.ரி.வி காணொளிகளை மீண்டும் எடுக்க முடியுமா என கேள்வி கேட்ட வண்ணம் இருந்தார்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சந்தை வீதியில் அமைந்துள்ள 3 மாடி கட்டடம் ஒன்றில் நடாத்தப்படும் மத்ரஸா ஒன்றில் செவ்வாய்க்கிழமை (5) இரவு மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பகுதியை சேர்ந்த எம்.எஸ். முஸ்அப் (வயது-13) என்ற மாணவன் தூக்கில் தொங்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். சாய்ந்தமருது பொலிஸாரால் மதரஸா நிர்வாகியாகிய மௌலவி கைது செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், அந்த மதரஸாவுக்கு சிசிரிவி கமெராக்களை பொருத்திய சிசிரிவி தொழில்நுட்பவியலாளரே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# எம்.பி.க்கள் மீது மர்மப் பொருள் வீச்சு

இரண்டு பேர் என இந்த சம்பவத்தில் ஈடுபட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மக்களவையில் புதன்கிழமை அலுவல்கள் நடந்து கொண்டிருந்த போது பார்வையாளர் கலரியில் அமர்ந்திருந்த 2 இளைஞர்கள் திடீரென தடுப்புகளைத் தாண்டி அவைக்குள் குதித்தனர்.

எம்.பிக்கள் அமர்ந்திருந்த கதிரைகள் மற்றும் மேசைகள் மீது தாவிச் சென்ற அவர்கள் மர்மப் பொருட்களை வீசியெறிந்தனர். அதிலிருந்து வாயு வெளியேறியது. அந்த இளைஞர்கள் இருவரையும் எம்.பிக்களே சுற்றி வளைத்துப் பிடித்து பாதுகாவலர்களிடம் ஒப்படைத்தனர்.

இதையடுத்து, பாராளுமன்றத்தில் பதற்றம் தொற்றிக் கொண்டது. ராகுல்காந்தி உள்ளிட்ட எம்.பிக்கள் அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டு நின்றதைப் பார்க்க முடிந்தது. மக்களவை உடனடியாக ஒத்திவைக்கப்படுவதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

"பார்வையாளர் பகுதியிலிருந்து 2 இளைஞர்கள் திடீரென குதித்து உள்ளே வந்தனர். அவர்கள் ஏதோ ஒன்றை வீசினர். அதிலிருந்து வாயு வெளியேறியது" என பேசிய மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்ற தாக்குதல் நடந்து 22ஆவது நினைவு தினம் புதன்கிழமை (13) கடைபிடிக்கப்பட்டது. பாராளுமன்ற வளாகத்தில் இந்த தாக்குதலில் உயிரிழந்த 9 பேருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்த தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்புப் படை வீரர்களின் குடும்பத்தினரைப் பிரதமர் நரேந்திர மோடியும் துணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கரும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

இந்த தாக்குதலில் பாராளுமன்றத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த 8 வீரர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்தனர்.

# இனிமேலும் அப்படி...

கல்முனையில் அமைந்துள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (12) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரித்தார். அங்கு அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பில் பல சர்ச்சைகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இந்த பிரதேச செயலகத்தை தற்போது உப பிரதேச செயலகமாக வகுக்கும் திட்டத்தில் சில அரச அதிகாரிகள் முன்னெடுத்து வருவதாக மக்கள் பிரதிநிதிகள் உட்பட பொதுமக்கள் தத்தமது கருத்துக்களில் குறிப்பிட்டுள்ளனர். ஆனால், இச்செயலகமானது உப பிரதேச செயலகம் அல்ல என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

அத்துடன் இனிவரும் காலங்களில் உப என்று அழைத்து பிரதேச செயலகத்தைத் தரம் குறைக்க முற்படுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் குறித்த பிரதேச செயலகத்துக்கான வர்த்தமானி ஒன்று இன்மையினால் ஊடகங்களும் உப பிரதேச செயலகம் என்று பிரசுரிப்பதை தவிர்க்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.




## வேகக்கட்டுப்பாட்டை மீறியதால் விபத்து

அஸ்ஹர் இப்றாஹிம்

திருக்கோவில் - பொத்துவில் பிரதான வீதியில் காஞ்சிரங்குடா என்ற இடத்தில் சுகாதார திணைக்களத்திற்கு சொந்தமான கெப் வண்டியொன்று வேகக் கட்டுப்பாட்டை மீறி வீதியின் பயணிகள் பஸ் நிறுத்துமிடத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கெப் வாகனத்தில் பயணித்தவர்களுக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன், பயணிகள் பஸ் நிலையத்தில் எவரும் இல்லாத நிலையில், உயிர் ஆபத்துக்களும் ஏற்படவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புக்கு 15.2 சதவீதத்தை ஒதுக்கினால்

# நாடு எப்படி உருப்படும்?

ஒரு பிரமாண்டமான இராணுவ வலயகமாவே வடக்கு, கிழக்கை இப்போதும் வைத்துக்கொண்டு பாதுகாப்புக்கு வரவு- செலவுத் திட்டத்தில் 15.2 வீதம் நிதியை ஒதுக்கினால் இந்த நாடு எப்படி உருப்படும்? பொருளாதாரத்தில் எப்படி நிமிரும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பியான எஸ்.ஸ்ரீதரன் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (13) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்கான செலவுத் தலைப்பு மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு கேள்வி எழுப்பினார்.


இம்முறை கொண்டுவர ப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக பல விடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன. சென்ற வருடமும் வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக தேர்தல்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டது. எம். பிக்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டது. செயல்பாடுகள் அறிவிக்கப்பட்டன. ஆனால், அவையெல்லாம் இப்போதும் அறிக்கையாகவே பாராளுமன்றத்தில் உள்ளன. இம்முறையும் பல புதிய புதிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. செவ்வாய்க்கிழமை அமைச்சர் பவித்திரா தேவி வன்னியாராச்சியுடன் பேசும்போது, யாழ்ப்பாணத்திற்கு நதி ஒன்றைக்கொண்டு வரப்போவதாக கூறினார். யாழ்ப்பாண நதி என்பது புதிய சொற்றொடர். ஆனால், இங்கே சொல்கின்றவை எல்லாம் நடைபெறுமா அல்லது இந்த



வரவு-செலவுத் திட்டம் அதனை நடைமுறைப்படுத்துமா என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இம்முறை வரவு- செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 423.7 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது மொத்தமான வரவு- செலவுத் திட்டத்தில் 11.6 சதவீதம். பொது பாதுகாப்புக்கு 140.7 பில்லியன் ரூபா .இது மொத்த வரவு- செலவுத் திட்டத்தில் 3.6 வீதம். எனவே, வரவு- செலவுத் திட்டத்தில் 15.2 சதவீதமான நிதி பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் தற்போது யுத்தம் இல்லை. எங்கேயும் குண்டு சத்தங்கள் இல்லை. யாரும் துப்பாக்கி தூக்கியதாகத் தெரியவில்லை. ஆனால், இந்த நாட்டில் உள்ள 2 இலட்சம் வரையிலான படைகளை வடக்கு, கிழக்கில்தான் வைத்துள்ளீர்கள். ஒரு பிரமாண்டமான இராணுவ வலயகமாவே வடக்கு, கிழக்கு இப்போதும் உள்ளது. இவர்களுக்கு இவ்வளவு நிதியை ஒதுக்குவதென்றால் நாட்டின் பொருளாதாரம் எப்படி வளர முடியும் எனக் கேள்வியெழுப்பினார்.



## அக்போவிடம் சேஸ்டை புரிந்தவருக்கு பலத்த காயம்

அஸ்ஹர் இப்றாஹிம்

மது போதையில் இளைஞரொருவர், வீதியால் சென்ற யானையிடம் சேஸ்டை செய்ததில் அவரை காலால் உதைத்து தள்ளியதால் பலத்த காயங்களுகுள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தனது முன்னங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தால் சிகிச்சையளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட “அக்போ” என்றழைக்கப்படும் யானை உணவு தேடி திரப்பனே பிரதேசத்தைச் சேர்ந்த கணுமுல்லேகம வாவியை அண்டிய பிரதேசத்தில் வீதியால் சென்று கொண்டிருக்கும்போது, மது போதையிலிருந்த இளைஞரொருவர் யானையில் கீழால் புகுந்து விளையாடி, அதன் தும்பிக்கையையும் பிடித்துள்ளார்.

இறுதியில் பிரதேசவாசிகள் இவ இளைஞனை பலமுறை எச்சரித்தும் அதனையும் பொருட்படுத்தாது பின்புறமாக அதன் வாலைப்பிடித்து முதுகில் ஏற எத்தனித்தபோது, தனது பின் காலால் இளைஞனைத் தாக்கியதில், குறித்த இளைஞன் தூர வீசப்பட்டுப் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



## தப்பியோடிய சிறுமிகள் கைது

பொலன்னறுவை- ஹிகுராக்கொட, ஹடமுன சிறுவர் இல்லத்திலிருந்த மூன்று சிறுமிகள் தப்பியோடிய நிலையில், ஹிகுராக்கொட நகரில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஹிகுராக்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சொந்தமான இந்த குடியிருப்பில் உள்ள மூன்று சிறுமிகளும் தற்போது பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும், பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு தப்பிச் சென்ற சிறுமிகள் மதிரிகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 13, 14 மற்றும் 16 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 32 வயது காதலனால் 15 வயது சிறுமி வன்புணர்வு

அஸ்ஹர் இப்றாஹிம்

குருநாகலை - தோறயாய பிரதேசத்தில் 15 வயதுடைய சிறுமியை, பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய 32 வயதுடைய காதலன் கைது செய்யப்பட்டுள்ளார்.

15 வயதுடைய சிறுமியும், 32 வயதுடைய இளைஞனும் காதல் வசப்பட்டிருந்த நிலைமையில், இரு வீட்டாரின் சம்மதத்தோடு உரிய வயது வந்ததும் சிறுமியைத் திருமணம் செய்து தருவதாக பொருந்தியும், குருநாகல்- பிரியங்கரம பிரதேசத்தில் தனது மாமியுடன் வசித்து வந்த சிறுமியை, மாமி வீட்டில் இல்லாத சமயத்தில் வீட்டினுள் நுழைந்து காதலன் சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தியுள்ளார்.



விடயமறிந்த அயலவர்கள் 119 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி பிரியங்கரகம பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் காதலனான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சிறுமி வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விடயமாக பிரியங்கரகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வர்த்தக நிலையத்தை கொள்ளையடித்த மூவர் கைது

எம்.றொசாந்த்

யாழ். புத்தூர் பகுதியில் வர்த்தக நிலையமொன்றை உடைத்து அங்கிருந்த பொருட்களைக் கொள்ளையடித்த குற்றத்தில் மூவர் செவ்வாய்க்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளனர்.

புத்தூர் கலைமதி பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து சில பொருட்களும் வாள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசம்பர் 10ஆம் திகதி புத்தூர் பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன்று உடைக்கப்பட்டு சி.சி.ரி.வி கமரா, தொலைக்காட்சி, சிகரெட் பெட்டிகள், தொலைபேசி மீள் நிரப்பு அட்டைகள் என பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டதாக உரிமையாளரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் பிரகாரமே குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




## நுவரெலியாவில் போராட்டம்

செ.திவாகரன்




நுவரெலியா நீதிவான் குஷிகா குமாரசிறியை இடமாற்றம் செய்வதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டமொன்று நுவரெலியா பிரதான தபால் நிலையத்திற்கு முன்பாக புதன்கிழமை (13) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் திறமையின்மையினால் வழக்குகள் தாமதப்படுவதாக நீதவான் குற்றம் சுமத்தியதையடுத்து, நவம்பர் 06ஆம் திகதி நீதிவானின் பணிப்புரைக்கு எதிராக திட்டமிட்ட வகையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரும் நீதிமன்ற கடமைகளில் இருந்து வெளியேறியதால் நுவரெலியா நீதிவான் குஷிகா குமாரசிறிக்கு தண்டனையின் அடிப்படையில் எதிர்வரும் 01.01.2024 முதல் மஹியங்கனை மாவட்ட நீதிமன்றத்துக்கு மேலதிக பதில் மாவட்ட நீதிபதியாக நீதிச் சேவை ஆணைக்குழுவினால் இடமாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில், நுவரெலியா நீதிமன்றத்தின் வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தி தவறுகள் குறித்து உரிய தண்டனை வழங்கி பொதுமக்கள் குறித்து அதிகம் கவனம் செலுத்தும் நீதிவான் குஷிகா குமாரசிறியை இடமாற்றம் செய்வதை தாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனவும் நீதிபதியை தொடர்ந்தும் நுவரெலியா நீதிமன்றத்தில் கடமையாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் நீதிபதியின் இடமாற்றம் உடனடியாக இரத்துச்செய்ய வேண்டுமெனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## சீனியை பதுக்கிக்கினால் சட்ட நடவடிக்கை

யாழ்ப்பாணத்தில் சீனியை பதுக்கி வைத்திருந்தால் நுகர்வோர் அதிகார சபை ஊடாக அவற்றை வெளிக்கொண்டு வந்து, பதுக்கி வைத்திருந்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

“வடக்கு மாகாணத்திற்கு 100 மெற்றிக் தொன் சீனி கூட்டுறவு சமாசம் ஊடாக கிடைத்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளது. உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

அந்நிலையில் சீனியை பதுக்கி வைத்து, செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த சிலர் முனைவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

அவ்வாறானவர்களை நுகர்வோர் அதிகார சபையின் ஊடாக வெளிக்கொண்டு வந்து, பதுக்கி வைத்திருப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்” என அவர் தெரிவித்துள்ளார்.



## வாளுடன் ஒருவர் கைது

எஸ் தில்லைநாதன்

யாழ். புத்தூர் சந்தியில் வாளுடன் நின்ற ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் ஒருவர் செவ்வாய்க்கிழமை (12) கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருட்டுச் சம்பவம் தொடர்பான தேடுதல் நடவடிக்கைக்காக காங்கேசன்துறை பொலிஸார் சென்று கொண்டிருந்தவேளை, குறித்த சந்தேகநபர் புத்தூர் சந்தியில் வாளுடன் நின்றுள்ளார். இதனையடுத்து பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வலி நிவாரணி மாத்திரைகள் மீட்பு: சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

எஸ்.றொசேரியன் லெம்பேட்

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அடுத்த வேதாளை கடற்கரையில் இருந்து நாட்டுப்படகில் இலங்கைக்கு கடத்த முயன்ற சுமார் ஒரு இலட்சம் வலி நிவாரணி மாத்திரைகள் இந்திய கடலோர காவல் படையினரால் நடுக்கடலில் சுற்றிவளைக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்றுள்ளது.

இந்திய கடலோர காவல் படை வீரர்களை கண்டதும் படகில் இருந்தவர்கள் கடலில் குதித்து தப்பி ஓடியுள்ளதாகவும் படகுடன் வலி நிவாரணி மாத்திரைகளை மீட்டு, இந்திய காவல்படை அதிகாரிகளால் விசாரணைகள் நடத்தி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

பறிமுதல் செய்யப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகள் போதை மாத்திரைகளாக இலங்கையில் பயன்படுத்தப்படுவதற்காக கொண்டு செல்லப்பட்டதாகவும் இதன் மொத்த இந்திய மதிப்பு சுமார் ரூ.8 இலட்சம் எனவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.



# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரிப்பு

பெண் குழந்தைகள், சிறுமிகள், யுவதிகள் மற்றும் வயோதிப பெண்கள் ஆடங்களாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைகள், நாளுக்கு நாள் நமது நாட்டில் அதிகரித்துள்ளன. இதனால், தனியாக வெளியில் செல்வதற்கு மட்டுமன்றி, வீடுகளிலும் தனியாக இருப்பதற்குப் பெண்கள் அச்சமடைந்துள்ளனர்.

பொதுப்போக்குவரத்தில் பெண்களுக்கு எதிரான சீண்டல்களும் சேஷ்டைகளும் அதிகரித்துள்ளன. சில பெண்கள், தங்களுக்கு இழைக்கப்படும் சீண்டல்களைத் தட்டிக்கேட்டு, அந்த நபருக்கு எதிராகக் கூச்சலிட்டு, தண்டனையையும் பெற்றுக்கொடுக்கின்றனர். சட்டத்தைப் பொதுமக்கள் கையிலெடுக்க முடியாது. எனினும், ஸ்தலத்தில் வைத்தே தண்டிக்கத் துணிந்துவிட்டனர். இந்த தற்றுணிவு பாராட்டத்தக்கது.

இதேவேளை, தங்களுக்கு மிகநெருங்கிய உறவினர்களால், அக்கம் பக்கத்தினரால், காதலர்களால், சிறுமிகளும், யுவதிகளும் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் யுவதிகளும் சிறுமிகளும் விழிப்பாக இருக்கவேண்டும்.

அதுமட்டுமன்றி, குழந்தைகளையும் விட்டுவைப்பதாய் இல்லை. ஆகையால், தன்னுடைய பிள்ளைகளைக் கணவன், வீட்டிலிருக்கும் ஆண்களிடம் விட்டுவிட்டு வெளியே செல்லும்போது, தாய் மற்றும் சகோதரிகள் மிகமிக அவதானமாகவே இருக்கவேண்டும்.

இதனிடையே, பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவிகளை இலக்கு வைத்து, மோட்டார் சைக்கிள்களில் செல்லும் இளைஞர்கள், அம்மாணவிகளுக்குத் தொந்தரவு விளைவிக்கின்றனர். இவற்றைத் தடுப்பதற்கு பொலிஸார் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். அவ்வாறானவர்களுக்கு எதிராக நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தின் ஊடாக தண்டனையைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். அது ஏனையோருக்கு ஒரு பாடமாக இருக்கும்.

மாணவிகளுக்குப் பாதுகாப்பற்ற பிரதேசங்களில், ஆகக்கூடுதலான பொலிஸாரை சிவில் உடைகளில் பாதுகாப்புக்கு நிறுத்தி, தொந்தரவு செய்யும் நபர்களைக் கண்காணித்து, கைது செய்யவேண்டும். எல்லா மாணவிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவது, பொலிஸ் திணைக்களத்துக்கு இயலாத காரியமாகும். எனினும், முறைப்பாடுகள் கிடைக்கும் பொலிஸ் பிரிவுகளில் மேலதிக பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த ஆலோசிக்க வேண்டும்.

பாடசாலைகளுக்கு மாணவிகள் செல்லும் போது, பாடசாலைகளை விட்டு வெளியேறி வீடுகளுக்கும், மேலதிக வகுப்புகளுக்கும் செல்லும் போது, தொந்தரவு செய்யும் இளைஞர்கள் உள்ளிட்ட குழுவினரை இனங்காண்பதற்கு ஒருசில பொலிஸ் பிரிவுகளில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் வரவேற்கத்தக்கது.

இலங்கையில் இந்த ஆண்டு பல்வேறு வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை இருபதாயிரத்துக்கும் அதிகமாக உள்ளதாக சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதாரப் பணியக அதிகாரியான நெதாஞ்சலி மபிடிகம தெரிவித்துள்ளார். இது பெண்களிடையே பெரும் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

வீட்டு வன்முறைகளுக்கு அப்பால், கர்ப்ப காலத்தில் அதிகளவாகப் பெண்கள் வன்முறைக்கு ஆளாகின்றனர். பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. ஒவ்வொரு பெண்களையும் தங்களுடைய தாய், சகோதரிகள், உறவுக்கார பெண் என நினைக்கும் வரையிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறையாது. இவை தொடர்பில், ஆண்களுக்கு தெளிவூட்டுவது காலத்தின் கட்டாயமாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

துறவுநிலை என்பது மாந்தர்களையோ எந்த உயிரினங்களையோ விலக்கி வைத்து வாழ்வதில்லை. துறவிகள் எவரையும் வெறுக்க மாட்டார்கள்.

அவர்கள் களங்கமற்ற அன்பு நிலையில்த்தான் இருப்பார்கள். ஆசையுள்ளவன் கண்டதையும் பார்த்து அடைய விரும்புவான். ஆனால், அன்புடையவர்கள், தியாகம் செய்யத் தயங்கமாட்டார்கள். அத்துடன், தாங்கள் செய்யும் காரியங்களில் பெருமைப்படுவதோ, அதை விளம்பரப்படுத்துவதோ மாட்டார்கள்.

ஆனால், இன்று சிலர் தங்களைத் தாங்களே துறவிகள் எனக் காட்டிக்கொண்டு, வெட்கமே இல்லாமல் இராஜபோக வாழ்க்கை வாழ்ந்து, சிற்றின்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இறைஞானம் உள்ளவர்கள், எளிய வாழ்க்கையைத்தான் வாழ்வார்கள். காசு, பணம், சொத்து சேர்க்கமாட்டார்கள்; கிடைக்கும் உணவை உண்பார்கள். கிடைக்காது விட்டால் கவலைப்படமாட்டார்கள். அன்பான துறவிகள் பற்றுக்கு அப்பாற்பட்டவர்கள்.

நன்றி: பருத்தியூர் பால. வயிரவநாதன்

## அ.நிக்ஸன்

பிரித்தானிய பாராளுமன்ற

# விவாதம் சொல்லும் செய்தி என்ன?

ஈழத் தமிழர் விவகாரம் குறித்து பிரித்தானிய பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் இலங்கைத்தீவில் நல்லிணக்கம், மத நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைப் பாதுகாப்பு என்ற பேச்சுக்களுக்கு மாத்திரமே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது.

தமிழர்கள் ஒரு "தேசிய இனம்" என்பதும் கட்டமைக்கப்பட்ட "இன அழிப்பு" தொடர்கிறது என்ற நியாயமான கருத்தும் விவாதத்தில் சேர்க்கப்படவில்லை.

ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான அவசியம் மற்றும் இன அழிப்பு என்ற வாதத்தைச் சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எடுத்துரைத்திருந்தாலும் பிரித்தானிய அரசாங்கம் அதற்குப் பதில் வழங்கவில்லை.

ஈழத்தமிழர்கள் குறித்த விவாதத்தை ஸ்கொட்லாந்து தேசியக் கட்சியின் (Scottish National Party) பாராளுமன்ற உறுப்பினர் மார்ட்டின் டே தலைமையில் இந்த விவாதம் இடம்பெற்றிருந்தது.
வன்முறை மற்றும் இனப்படுகொலையின் சுழற்சியுடன் துரதிர்ஷ்டவசமாகத் தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நிகழ்வுகள் உயிர் பிழைத்த தமிழர்களை மேலும் துன்புறுத்துவதாக மார்ட்டின் டே தனது விவாதத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஈழத்தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் தொழிற் கட்சி உறுப்பினர்கள் பலரும் விவாதத்தில் பங்குபற்றினர்.

ஆனால், விவாதத்தில் உரையாற்றிய பிரித்தானிய அரசதரப்பு உறுப்பினர்கள் பலரும் இலங்கைத்தீவில் நடப்பது மனித உரிமை மீறல் விவகாரம் என்ற தொனியிலும் இலங்கை ஒற்றையாட்சி அரசைப் பாதுகாக்கும் முறையிலும் கருத்துக்களை அதிகளவில் முக்கியப்படுத்தியிருந்தனர்.
இந்த விசேட விவாதம் பாராளுத்தின் வெஸ்ட்மின்ஸ்டர் மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரித்தானிய நேரப்படி பிற்பகல் 2.30இல் இருந்து 4.30 வரை இடம்பெற்றது.
இலங்கை அரசாங்கம் தற்போது மீண்டுமொரு உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை (Truth and Reconciliation Commission) உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. ஆனால், இது பொறுப்புக் கூறலுக்கான பாதையையோ அல்லது உரிய சாட்சியங்கள் பாதுகாப்பு பொறிமுறையையோ ஏற்படுத்தாது என்ற கரிசனை காணப்படுவதாக மார்ட்டின் டே விவாதத்தில் எடுத்துரைத்திருந்தார்.
ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அவசியமானது என்றும் மார்ட்டின் டே தனது விவாதத்தில் நியாயப்படுத்தியும் இருந்தார்.
உறுப்பினர்களின் உரைகள் முடிவடைந்த பின்னர் வெளிவிவகார பொதுநலவாய விவகாரங்களுக்கான அமைச்சர்களில் ஒருவரான லியோ டொச்செட்ரி பதிலளித்தார்.
ஆனால், இலங்கை அரசாங்கத்தின் பொறுப்புக் கூறல் இன்மை உள்ளிட்ட முக்கியமான விவகாரங்களுக்கு அமைச்சர் லியோ டொச்டெரி பதிலளிக்கவில்லை.

ஆனாலும், சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளையும் மீறி இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதாக அமைச்சர் லியோ டொச்செரி குற்றம் சுமத்தினார்.

இலங்கைத்தீவில் "இன நல்லிணக்கம்" "மத நல்லிணக்கம்" ஏற்பட வேண்டும் என்பது பற்றியும் அமைச்சர் தனது பதிலில் முக்கியப்படுத்தியிருந்தார். இன அழிப்பு மற்றும் சுயநிர்ணய உரிமை பற்றிய கேள்விகளுக்கு அமைச்சர் லியோ டொச்செரி தனது பதிலில் கவனம் செலுத்தவில்லை.

மாறாக, இலங்கை ஒற்றையாட்சி அரசைக் காப்பாற்றும் உத்திகள் அமைச்சரின் பதிலில் தென்பட்டன. மனித உரிமைகள் விடயத்தில் பிரிட்டனின் கரிசனைக்குரிய 32 நாடுகளில் இலங்கையும் ஒன்று என்ற விடயத்தில் பிரித்தானியா கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் தனது பதிலில் மேற்கோள் காண்பித்திருந்தார்.

இலங்கையில் பல வருடகாலமாக இன மத பதற்றங்கள் நிலவுவதாகவும் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது ஒடுக்கு முறைக்குள்ளாக்கப்படுவது பிரித்தானியாவுக்கு நன்கு தெரியும் எனவும் அமைச்சர் லியோ டொச்செரி எடுத்துரைத்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கிவிட்டு சர்வதேச தராதரத்தில் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவது குறித்து இலங்கை அரசு வாக்குறுதி வழங்கியிருந்தது. ஆனாலும், பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து பிரித்தானிய அரசாங்கம் அவதானித்துள்ளது என்றும் அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் மற்றும் நினைவு கூரலிற்கு எதிரான பொலிஸாரின் கடுமையான நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழர்களை இலக்கு வைத்து வடக்குக் கிழக்கில் இலங்கைப் படையினரின் கண்காணித்தல்கள், மிரட்டல்கள் தொடருவதாக அமைச்சர் தனது பதிலில் விளக்கியிருக்கிறார். முன்னாள் போராளிகளும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களும் கண்காணிக்கப்பட்டு அச்சுறுத்தப்படுகின்றனர்.

எனவே, பிரித்தானிய பாராளும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களைக் கருத்தில் கொண்டுள்ளது எனவும் அமைச்சர் லியோ டொச்செரி விளக்கமளித்திருக்கிறார்.

புலம்பெயர் அமைப்புகளின் கோரிக்கையினால் பிரித்தானிய அனைத்து கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் செயற்குழு 2021 மார்ச் மாதமும் இவ்வாறான விவாதம் ஒன்றை நடத்தியிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் மீது கண்டனமும் வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால், அந்த விவாதத்திலும் பிரித்தானிய அரசாங்கத்தின் நிலைப்பாடு இலங்கை மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் நல்லிணக்கம் என்ற கருத்துக்களை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டிருந்தது.

அத்துடன், மைத்திரிபால - ரணிலின் "நல்லாட்சி அரசாங்கம்" எனப் பெயர் சூட்டப்பட்டு பிரித்தானிய, அமெரிக்க மற்றும் இந்திய அரசுகளின் ஆதரவுடன் மைத்திரி - ரணில் அரசாங்கம் பதவி வகித்திருந்தாலும் ஈழத்தமிழர் விவகாரத்தில் எதுவும் நடக்கவில்லை. குறிப்பாக 2015இல் நிலைமாறு கால நீதி என சர்வதேசத்தினால் சித்தரிக்கப்பட்டிருந்தது. ஆனால், ஈழத்தமிழர் விவகாரத்துக்கு அது பொருத்தமானதாக அமையவேயில்லை. தோல்வியடைந்தது.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேனவை 2015இல் ஜனாதிபதியாக்கிவிட்டு தமிழர் விவகாரத்தில் நிலைமாறு கால நீதி என மார் தட்டியமை மிகப் பெரும் சர்வதேச அரசியல் தவறு.

இது தொடர்பாகத் தொழிற் கட்சி உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியபோது அமைச்சர் லியோ டொச்செரி அதற்குப் பதிலளிக்க மறுத்துவிட்டார். ஈழத்தமிழர்கள் தொடர்பாக மார்ட்டின் டே முன்வைத்த கோரிக்கைகளுக்குப் பொறுப்பான பதிலை அமைச்சர் வழங்கவுமில்லை.

மேலும், கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் பௌத்த மயமாக்கல், தமிழர் விவகாரத்தில் சிங்கள ஆட்சியாளர்களின் கூட்டுப் பொறுப்பு என்ன என்பது பற்றி கூடு பேசப்படவுமில்லை. ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டால் அதனை நல்லிணக்கமாகக் காண்பிப்பது மத நல்லிணக்கமாகக் கூறுவது போன்ற கருத்துப் பரிமாற்றங்களே அதிகளவில் தென்பட்டன.

2019இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கு ஒப்பான விசாரணைகளையே 30 வருடப் போரின் போதும் அதற்கு முந்திய தமிழர் படுகொலை பற்றிய விசாரணைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்து பிரித்தானிய அரசாங்கத்தரப்பில் இருந்து வெளிப்பட்டது.

இந்த வாதத்தில் உரையாற்றிய உறுப்பினர்களின் கருத்தின் பிரகாரம், தத்தமது தேர்தல் தொகுதிகளில் வாழும் புலம்பெயர் தமிழர்கள் அதிருப்தி தெரிவிப்பதாகவும் இலங்கை அரசின் மீது சர்வதேசத்தினால் எந்த ஒரு நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்ற தொனி தெளிவாக வெளிப்பட்டன.

ஆனால், இன அழிப்பு தொடர்பான சர்வதேச விசாரணையை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும் என்ற அழுத்தமும் அதற்கான விபரங்களும் உரிய முறையில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் புலம்பெயர் அமைப்புகளினால் கையளிக்கப்படவில்லை என்பது புரிகிறது.

குறிப்பாக 1958இல் இருந்து கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு என்பதற்குரிய ஆவணங்கள் கையளிக்கப்படவில்லை. இதன் காரணமாகவே சர்வதேசம் வழமையாக மார்தட்டுகின்ற "இன நல்லிணக்கம்" "நிலைமாறு மாறுகால நீதி" மற்றும் "மத நல்லிணக்கம்" பற்றிய பேச்சுக்களுக்குப் பிரித்தானிய அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது எனலாம்.

தமிழர் குறித்த அமெரிக்க இந்திய அரசுகளின் நோக்கங்களுக்கு மாறாகப் பிரித்தானிய அரசும் இயங்குவதற்குரிய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், புலம்பெயர் அமைப்புகள் உரிய முறையில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு என்பதற்கு ஆவணங்களைத் தயார்ப்படுத்தி வழங்கியிருந்தால் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம் என்பது இயல்பாகவே பேசப்பட வேண்டிய சூழல் உருவாகியிருக்கும். அதற்குரிய வேலைத்திட்டங்களைத் தாயகத்தில் உள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் புலம்பெயர் அமைப்புகள் ஒருமித்த குரலில் முன்னெடுக்கத் தவறியுள்ளன. அவ்வாறு செயற்பட்டிருந்தால் பிரித்தானிய பாராளுமன்ற விவாதத்தில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரியான நியாயப்படுத்தல்களை முன்வைத்திருப்பர்.

சமாதான பேச்சு ஆரம்பிக்கப்படவிருந்த 2001இல் தான் பிரித்தானிய விடுதலைப் புலிகள் மீது தடை விதித்திருந்தது. ஆனால் இதுவரையும் போர்க் குற்றத்தில் ஈடுபட்ட இலங்கை இராணுவத் தளபதிகள் மற்றும் சிங்கள அரசியல் தலைவர்கள் பலருக்குப் பிரித்தானிய அரசாங்கம் தடை விதிக்கவேயில்லை. இந்த நிலையில், சில புலம்பெயர் அமைப்புகளின் அழுத்தம் காரணமாகப் பிரித்தானிய பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதம் பாரிய தாக்கத்தைச் செலுத்துமெனக் கூற முடியாது. இதற்காகப் புலம்பெயர் அமைப்பு கடுமையாக உழைக்க வேண்டிய தேவையுள்ளது.

தனித்தனியாகப் பிரிந்தல்ல. ஒருமித்த குரலில் ஒரு அணியாக நின்று செயற்பட்டால் இது இலகுவாகச் சாத்தியமாகும்.

## கழிதங்கள்

### மழை நீர் தேக்கம் : மக்கள் பெரும் அவதி



நாட்டில் நிலவும் காலநிலை, இன்னும் சில நாட்களுக்கு நீடிக்குமென அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், மாலை வேளைகளில் மழை வெளுத்து வாங்குகின்றது. மலையக பிரதேசங்களில் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டு, போக்குவரத்து நெரிசல்களும் ஏற்படுகின்றன.

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட கொழும்பு மற்றும் தாழ்நில பிரதேசங்களில், வெள்ளநீர் தேங்கி நிற்கின்றது. இதனால், மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர். வெள்ளநீர் வடிந்தோடிய பிறகும், பல்வேறான தொற்றுநோய்கள் ஏற்படுவதற்கான அபாய நிலை காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது பருவமழை பெய்ய ஆரம்பித்திருப்பதால் காத்தான்குடி நகரசபை பிரிவில் பல உள்வீதிகள் மழை நீரில் மூழ்கியுள்ளன.

ஏற்கெனவே புனரமைக்கப் படாது, குண்டும் குழியுமாக காணப்படும் குறித்த வீதிகளில் மழை நீர் தேங்கியுள்ளதால் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் போக்குவரத்து செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மிக நீண்ட காலமாக இவ்வீதிகள் இவ்வாறான நிலையிலேயே காணப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். ஆகையால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய கவனத்தை செலுத்தி, தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரீ.எல்.ஜவ்பர்கான்

# இதழியல் சிறப்பு விருது விழா...

இலங்கை பத்திரிகையாளர் சங்கத்துடன் இணைந்து, இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் 24ஆவது தடவையாக நடத்திய இதழியல் சிறப்பு விருது விழா, கல்கிசை-மவுண்லேனியா ஹோட்டலில், டிசெம்பர் 12ஆம் திகதி இரவு நடைபெற்றது.
(படங்கள்: வருண வன்னியாராச்சி)


விஜய நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் தலைவர் ரஞ்சித் விஜேயவர்தன பிரதம அதிதியாக வருகை தந்தார்.


சிறந்த இணையத்தள வடிவமைப்பு: தமிழ் மிரர் இணையத்தளத்துக்கு (சான்றிதழ்)


சிறந்த இணையத்தள வடிவமைப்பு ஆங்கிலம்: டெய்லி மிரர் (சான்றிதழ்)


சிறந்த இணையத்தள வடிவமைப்பு: DailyFTக்கு (விருது)


சிறந்த பக்க வடிவமைப்பு : தமிழன் பத்திரிகைக்கு (விருது)


சிறந்த இணையத்தள வடிவமைப்பு தமிழ்: வீரகேசரி இணையத்தளம் (விருது)


பொதுமக்களினதும் வாசகர்களின் பாராட்டுக்களை பெற்றமைக்காக வழங்கப்படும் டீ.ஆர். விஜேவர்த்தன விருது: பீ. பாலசிங்கம்


சிறந்த புலனாய்வு செய்தி ஆங்கிலம்: சண்டே டைம்ஸ் – ரூபதீசன் ( சான்றிதழ்)


பிரதம அதிதிக்கு நினைவுச்சின்னம்


சிறந்த விளையாட்டு ஊடகவியலாளருக்கான விருது: தமிழ் லெப்டின் ராஜ் –தினக்குரல் (விருது)


சிறந்த விவரண கட்டுரைக்கான உபாலி விஜய வர்தன விருது : தமிழன் பத்திரிக்கை – ரவி வர்மன் ( சான்றிதழ்)


டெய்லி மிரர் பத்திரிக்கை, இணையத்தளம் ஆகியவற்றுக்கு ஒரு விருதும், இரண்டு சான்றிதழ்களும் கிடைத்தன


மேர்வின் டி சில்வா விருது: சுலோச்சனா ராமையா மோகன் – சிலோன் டுடே (விருது)


வீரகேசரி வெளியீட்டு நிறுவனமான எக்ஸ் பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிடெட் 11 விருதுகளை பெற்றுக்கொண்டுள்ளது.


சிறந்த சுகாதார கட்டுரை: ஹஸ்னா – தினக்குரல் ( விருது)



பெங்களூர்

## ராஜ்பவனுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தவர் கைது

பெங்களூர் பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் பேசிய மர்ம நபர் ராஜ்பவனில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார். இதனையடுத்து, உடனடியாக வெடிகுண்டு செயலிழப்பு பிரிவு பொலிஸார் ராஜ்பவனுக்கு விரைந்து சென்று அப்பகுதி முழுவதும் சோதனை செய்துள்ளனர். ஆனால், வெடிகுண்டு எதுவும் கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் குறித்த புகாரின் பேரில் பெங்களூர் விதான் சவுதா பொலிஸ் நிலைய பொலிஸார் கட்டுப்பாட்டு அறைக்கு வந்த தொலைபேசி எண்ணை சைபர் கிரைம் பொலிஸார் உதவியுடன் ஆய்வு செய்து, மர்ம நபரைத் தேடி வந்துள்ளனர். இதில் அந்த தொலைபேசி எண் கோலார் மாவட்டம் கோலார் டவுன் பகுதியைச் சேர்ந்த பாஸ்கர் என்பவருடையது என்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து பொலிஸார் அவரை கைது செய்து விசாரணை நடத்தியுள்ளனர்.

இதில் அவருக்கு எந்த உள்நோக்கமும் இல்லை எனவும் விளையாட்டாக இதை செய்ததாகவும் கூறியுள்ளார். இதுகுறித்து பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பெங்களூர்

## 10 அடி ஆழத்தில் திடீர் பள்ளம்



பெங்களூர் ஹலசூரில் உள்ள கென்சிங்டன் சிக்னல் சந்திப்பு அருகே திடீரென 10 அடி ஆழத்தில் சிமெண்ட் வீதியில் இராட்சத பள்ளம் ஏற்பட்டுள்ளது.

இதை பார்த்த அந்த வழியாக சென்ற வாகன சாரதிகள், பொதுமக்கள் நிலநடுக்கம் ஏற்பட்டிருக்குமோ? என பீதி அடைந்துள்ளனர்.


பரபரப்பான வீதியில் திடீர் பள்ளம் ஏற்பட்டதால் உள்ளூர் அதிகாரிகள் பாதுகாப்புக்காக அந்த பகுதியை சுற்றி வளைத்துள்ளனர். பின்னர் பொதுமக்கள், வாகனங்கள் பள்ளத்தில் விழுந்து விடாதபடி சுற்றிலும் பேரிகார்டர் அமைத்து, எச்சரிக்கை பலகை வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான முதற்கட்ட விசாரணையில் கடந்த ஆண்டு இந்த சிமெண்ட் வீதி போடப்பட்டுள்ளது. வீதியின் அடியில் உள்ள தண்ணீர் குழாயில் ஏற்பட்ட கசிவு காரணமாக இந்த பள்ளம் ஏற்பட்டதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கம் எதுவும் ஏற்படவில்லை. இருப்பினும், தொழில்நுட்ப நிபுணர்கள் முழுமையான ஆய்வு நடத்தி வருகின்றனர். கடந்த மே மாதம் பலத்த மழைக்குப் பிறகு நகரின் பிடிஎம் லேஅவுட் பகுதிகளில் 4 அடி பள்ளம் ஏற்பட்டுள்ளமை என்பது குறிப்பிடத்தக்கது.

மத்தியப்பிரதேசம்

## அணையாடைகளை நன்கொடையாக பெறும் கோயில்



மாதவிடாய் காலத்தில் பெண்களைக் கோயிலுக்குள் அனுமதிக்கக் கூடாது என்பது குறித்து பல முன்முடிவுகள் இருந்தாலும், மத்தியப் பிரதேசத்தின் தலைநகரான போபாலில் அமைந்துள்ள கோயிலான அன்னபூர்ணா தேவி கோயில் பெண்களின் உரிமைக்காகப் பாடுபடுவதில் கவனம் செலுத்துவதாக நம்பப்படுகிறது. மற்றவற்றிலிருந்து இந்த கோயிலைத் தனித்துவமாக்குவது என்னவென்றால், இங்கு பெண்களுக்கு அணையாடை (சானிட்டரி நாப்கின்கள்) நன்கொடையாக வழங்கப்படுகின்றன. உலகிலேயே இதுவே முதல்முறை என்றும் கூறப்படுகிறது.

இது குறித்து போபாலில் இயங்கும் ஹெய்செல் அறக்கட்டளையின் இயக்குநர் கூறுகையில், "அணையாடைகளை (சானிட்டரி நாப்கின்) விநியோகிக்கும் இந்த யோசனை அசாமின் கவுகாத்தியில் உள்ள காமாக்யா தேவி கோயிலிலிருந்து உருவானது ஆகும். அங்கு புகழ்பெற்ற அம்புபாச்சி திருவிழாவானது, மாதவிடாய் ஆரோக்கியம் மற்றும் சுகாதார நடைமுறைகளில் பணியாற்றுவதாக அறியப்படுகிறது. தெய்வங்களுக்கு மக்களால் வழங்கப்படும் பூ மாலைகள் மறுநாள் குப்பைகளில் வீசப்படுகின்றன. இதனால் யாருக்கும் பயனில்லை. மக்கள் பணத்தில் பயனுள்ள ஒன்றைச் செய்ய வேண்டும் என்று நம்பினேன். இந்த முயற்சியின் மூலம் அன்னபூர்ணா தேவி கோயிலுக்கு இதுவரை 11,000க்கும் மேற்பட்ட சானிட்டரி நாப்கின்களை மக்கள் வழங்கியுள்ளனர்" என்றார்.

தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு 4 (NFHS) படி, 15 முதல் 24 வயதுக்குட்பட்ட பெண்களில் 42 சதவீதம் பேர் மாதவிடாய் நேரத்தில் சானிட்டரி நாப்கின்களைப் பயன்படுத்துகின்றனர். வயது வரம்பு அதிகரிக்கப்பட்டால், மாதவிடாய் சுழற்சியின் போது சானிட்டரி நாப்கின் தேவைப்படும் பல பெண்களும் இதில் அடங்குவர். ஆகவே, போபால் அன்னபூர்ணா கோயிலில் மூன்று வகையான நன்கொடைகள் வழங்கப்படுகின்றன.

கோதுமை மற்றும் பருப்பு போன்ற தானியங்களும் வழங்கப்படும் என்றார்.



# சம்பியன்ஸ் லீக்: வெளியேற்றப்பட்ட யுனைட்டெட்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக்கிலிருந்து இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே லீக்கிலிருந்து யுனைட்டெட் வெளியேற்றப்பட்டுள்ளது. மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை கிங்ஸ்லி கோமன் பெற்றிருந்தார்.

இதேவேளை, இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், ஸ்பானிய லா லிகா கழகமான றியல் சொஸைடட்டுக்குமிடையிலான போட்டி 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

இந்நிலையில், நெதர்லாந்துக் கழகமான பி.எஸ்.வி ஐந்தோவனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியிருந்தது.



கிழக்கு மாகாண ஸ்ரீலங்கா கராத்தே சம்மேளனத்தின்

## பொதுச்சபைக் கூட்டமும், நியமனக் கடிதம் வழங்கலும்

அஸ்ஹர் இப்றாஹிம்

ஸ்ரீ லங்கா கராத்தே சம்மேளனத்தின் கிழக்கு மாகாணத்தினுள் உள்ளடங்குகின்ற அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்ட சம்மேளனங்களின் பொதுச்சபை கூட்டம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் தலைவர் முஹம்மது இக்பால் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் இடைக்கால நிர்வாக சபையால் நியமிக்கப்பட்ட புதிய நிர்வாக சபையினருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.



இரண்டாவது இருபதுக்கு–20 சர்வதேசப் போட்டியில்

## இந்தியாவை வென்ற தென்னாபிரிக்கா

இந்தியாவுக்கெதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் மழை காரணமாக முடிவேதும் பெறப்படாத நிலையில், போர்ட் எலிஸபெத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.



ரூபவாஹினி கிண்ண பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடர்:


## மன்னார் சம்பியனானது

அஸ்ஹர் இப்றாஹிம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒழுங்கு செய்திருந்த மன்னார் மாவட்ட ரூபவாஹினி கிண்ண பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரில் மன்னார் யோஸப்வாஸ் நகர் ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

பலஸ்தீன்

## 25 மருத்துவமனைகளை முடக்கியது இஸ்ரேல்



பலஸ்தீனத்தின் காசா நகர் மீது கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இஸ்ரேல் இராணுவம் போர் தொடுத்து வருகிறது. ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து, இஸ்ரேல் இந்த போரை தொடங்கியது.

அந்த வகையில், கடந்த 2 மாதங்களுக்கும் மேலாக காசாவை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேல், ஹமாசை ஒழிக்கும் வரையில் எத்தனை மாதங்கள் ஆனாலும் போரை தொடருவோம் என சூளுரைத்துள்ளது.

அதே சமயம், போரின் இலக்கை விரைவில் எட்டும் நோக்கில் இஸ்ரேல் படைகள் தீவிர முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும், காசாவில் அனைத்து வழியிலான தாக்குதல்களையும் விரிவுப்படுத்தி வருவதாகவும் இஸ்ரேல் அரசு கூறியுள்ளது.

இந்நிலையில், காசாவில் உள்ள 36 மருத்துவமனைகளில் 25 மருத்துவமனைகளின் செயல்பாடுகள் இஸ்ரேல் தாக்குதலால் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளதாகவும், எஞ்சியுள்ள 11 மருத்துவமனைகளும் ஓரளவு மட்டுமே செயல்படுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா. பத்திரிகையாளர்கள் சந்திப்பில் காசாவிலிருந்தபடி உலக சுகாதார அமைப்பின் ரிச்சர்ட் பீப்பர்கார்ன் கூறியதாவது,

"காசாவிலுள்ள 3இல் ஒரு பகுதிக்கும் குறைவான மருத்துவமனைகள்தான் ஓரளவுக்கு இயங்கி வருகின்றன. வெறும் 66 நாட்களில் காசாவின் சுகாதாரக் கட்டமைப்பு சீர்க்குலைக்கப்பட்டுவிட்டது. 36 மருத்துவமனைகளில் 25 மருத்துவமனைகள் செயல்படமுடியாமல் முடங்கியுள்ளன.

வடக்கு காசாவில் ஒன்று, தெற்கு காசாவில் 10 என மொத்தம் 11 மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன. அவையும் முழுமையாக இயங்கவில்லை. காசாவில் நடத்தப்படும் தாக்குதலால் மருத்துவமனைகளும், பிற சுகாதாரக் கட்டமைப்புகளும் இதற்கு மேலும் நிலைகுலைந்தால் அது தாங்கமுடியாத பாதிப்பை ஏற்படுத்தும். அத்தகைய கொடுமையான நிலை ஏற்படக்கூடாது என்று வேண்டுகிறோம்" என தெரிவித்தார்.



இஸ்ரேல்

## சுரங்கப் பாதைகளில் கடல் நீரை நிரப்பும் இஸ்ரேல்

"ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்கும் வரை போர் ஓயாது" என கூறி இஸ்ரேல் இராணுவம் காசா மீது பயங்கரமான தாக்குதலை நடத்தி வருகிறது. வடக்கு காசா அடையாளம் தெரியாத வகையில் உருக்குலைத்துள்ளது.

என்றபோதிலும் வீடுகள், மருத்துவமனைகள், வழிபாட்டு தலங்கள் ஆகியற்றுடன் சுரங்கங்கள் அமைத்து ஹமாஸ் அமைப்பினர் மறைந்து இருந்து, இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் இராணுவம் குற்றஞ்சாட்டி வந்தது. அதற்கேற்ப பல்வேறு வீடியோ ஆதாரங்களை வெளியிட்டு வந்தது.

ஹமாஸ் அமைப்பினர்கள் இரகசிய சுரங்கத்திற்குள் பிணைக்கைதிகள் மற்றும் ஆயுதங்களையும் மறைத்து வைத்திருக்கலாம் என இஸ்ரேல் நம்புகிறது.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினரின் சுரங்கத்திற்குள் கடல் நீரை செலுத்தும் பணியை இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்டு வருவதாக அமெரிக்க பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்த நடவடிக்கை சுரங்கங்களை அழிக்க பயன்படும் என சில அமெரிக்க அதிகாரிகள் கூறியதாகவும் அந்த பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஆனால், இஸ்ரேல் இராணுவம் இதுகுறித்து கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பான்

## உலகின் 2ஆவது அதிக வயதான பெண் மரணம்



அதிக ஆயுட்காலம் வாழ்ந்த மிக வயதான மனிதர்களில் பல நபர்களின் தாயகமாக ஜப்பான் உள்ளது.

உலகின் 2ஆவது அதிக வயதான பெண்ணும், ஜப்பானின் மிக வயதான பெண்மணியுமான ஃபுசா டாட்சுமி தனது 116 வயதில் காஷிவாராவில் உள்ள முதியோர் இல்லத்தில் காலமானார்.

ஃபுசா டாட்சுமி என்ற அந்த மூதாட்டி, செவ்வாய்க்கிழமை(12), அவருக்குப் பிடித்த உணவான பீன்ஸ்-பேஸ்ட் ஜெல்லியை உட்கொண்டு, பராமரிப்பு நிலையத்திலேயே மரணமடைந்தமை தெரியவந்துள்ளது.

இது குறித்து அதிகாரி ஒருவர், "டாட்சுமி தனது 116ஆவது வயதில் டிசம்பர் 12ஆம் திகதி இறந்தார். இரண்டு உலகப் போர்கள் மற்றும் பல தொற்றுநோய்களின் இடையே வாழ்ந்த டாட்சுமி, கடந்த ஆண்டு 119 வயதில் கேன் தனகா காலமான பிறகு ஜப்பானின் மூத்த நபராக அங்கீகரிக்கப்பட்டார்.

1907இல் பிறந்த டாட்சுமி, ஒசாகாவில் ஒரு விவசாயியான தனது கணவருடன் மூன்று குழந்தைகளை வளர்த்தார். அவர் சமீபத்தில் தனது பெரும்பாலான நாட்களை முதியோர் இல்லத்தின் படுக்கையில் கழித்தார்" என தெரிவித்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 14 டிசெம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.